1971 டிசம்பர் 13]

திருமதி த. ந. அனந்தநாயகி : தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்து விற்பனை ரூ. 38,000-க்கு ஆகியிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு மேலும் வெளிநாட்டிலிருந்து ஆர்டர்ஸ் வருகிறதா ? அதற்கு ஈடான உற்பத்தி செய்ய முடியாமல் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் துறையில் இருப்பதை மட்டும் சொன்னேன். மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

Prevention of sea erosion

* 326 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to prevent sea erosion in Kanyakumari coast?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* 327 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to construct groynes to check sea erosion at pad in Tirunelveli district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பூண்டி பாசன ஆராய்ச்சி நிலையம் நடத்திய மாதிரி ஆய்வுகளின் அடிப்படையில் நிலையான ஏற்பாடாக ரூ. 2.62 லட்சம் செலவில் 46 மீட்டர் (150 அடி) நீளத்திற்கு கருங்கற்களைக் கொண்டு தடுப்புச் சுவர் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இப் பணியை நிறைவேற்றும் பொறுப்பை மேற்கொள்ளும் நிறுவனத்தை முடிவு செய்த பின்னர் இப்பணி மேற்கொள்ளப்படும்.

தரங்கம்பாடியிலுள்ள பயணிகள் விடுதி

* 328 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடியில் உள்ள பயணிகள் விடுதியை புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

@ 262—263 ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.